Puducherry

Reg.Bulletin

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 02.05.2025 நேரம் மாலை 6.10 மணி

-----------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாட்டின் முதலாவது ஆழ்கடல் சரக்கு பெட்டக முனையமாக மேம்படுத்தப்பட்டுள்ள, கேரளத்தின் விழிஞ்ஞும் சர்வதேச துறைமுகத்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

ஆந்திர மாநிலம் அமராவதியில், புதிய தலைநகரம் அமைப்பதற்கான, கட்டுமானப் பணிகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை மறுதொடக்கம் செய்து வைத்தார்.

மும்பையில் நடைபெறும் வேவ்ஸ் உச்சி மாநாட்டில், ஊடக மற்றும் கேளிக்கை துறை தொடர்பான, வேவ்ஸ் பிரகடனம், 77 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதுச்சேரியில் ஒருங்கிணைந்த பொலிவுரு பேருந்து நிலையத்தை துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர், இன்று திறந்து வைத்தனர்.

மோடி-துறைமுகம்

பகுதியளவு தானியங்கி வசதியுடன், நாட்டின் முதலாவது ஆழ்கடல் சரக்கு பெட்டக முனையமாக மேம்படுத்தப்பட்டுள்ள, கேரளத்தின் விழிஞ்ஞும் சர்வதேச துறைமுகத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். நாட்டின் கடல்சார் உள்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துவதில், இது ஓர் முக்கிய நடவடிக்கை என்று, விழாவில் பேசுகையில் அவர் கூறினார். விழா குறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

*மோடி-துறைமுகம்*

(வாய்ஸ்)

புதுயுக மேம்பாட்டிற்கான சிறந்த முன்மாதிரியாக, விழிஞ்ஞும் துறைமுகம் திகழ்வதாகவும், நாட்டிற்கும், கேரள மாநிலத்திற்கும், பொருளாதார ஸ்திரத் தன்மை மற்றும் பல்வேறு நன்மைகளை வழங்குவதாக, விழிஞ்ஞும் துறைமுகம் திகழும் என்றும் பிரதமர் தெரிவித்தார். தொடர்ந்து துறைமுகத்தின் செயல்பாட்டுக் கட்டிடங்களையும் கட்டுப்பாட்டு வசதிகளையும் அவர் பார்வையிட்டார். கேரள ஆளுநர் திரு ஆர் வி அர்லேக்கர். முதலமைச்சர் திரு பினராய் விஜயன், மத்திய இணை அமைச்சர்கள் திரு சுரேஷ் கோபி, திரு ஜார்ஜ் குரியன் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர். கேரள மாநிலத்தின் கனவுத் திட்டங்களில் ஒன்றான விழிஞ்ஞும் துறைமுகத் திட்டம், 8 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பிட்டில், அரசு-தனியார் ஒத்துழைப்பு திட்டமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

*மோடி-ஆந்திரா*

ஆந்திர மாநிலம் அமராவதியில் புதிய தலைநகரம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை மறுதொடக்கம் செய்து வைத்து, மொத்தம் 58 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் வேறுபல சாலை மற்றும் ரயில்வே திட்டங்களையும் தொடக்கி வைத்தார். இந்தியாவில் வழக்கமான உள்கட்டமைப்பு வசதிகளுக்கு அப்பாற்பட்டு, டிஜிட்டல் மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகளும் வேகமாக மேம்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். உலகிலேயே உள்கட்டமைப்பு துறைகளை வேகமாக நவீனப்படுத்தி வரும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாகவும் பிரதமர் கூறினார்.

ஆந்திர முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில், மாநிலம் முழுவதிலும் இருந்து 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றுள்ளனர். அமராவதியில் கடந்த 6 ஆண்டுகளாக நின்று போயிருந்த தலைநகரப் பணிகள் மீண்டும் தொடங்குவது குறித்து, மாநில மக்கள் அனைவரும் உற்சாகம் அடைந்திருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

வேவ்ஸ்-செய்திகள்

மும்பையில் நடைபெறும் வேவ்ஸ் உச்சி மாநாட்டில், 77 நாடுகளின் பங்கேற்புடன் இன்று நடைபெற்ற உலக ஊடகத் துறை பேச்சு வார்த்தைகளின் போது, ஊடக மற்றும் கேளிக்கை துறை தொடர்பான, வேவ்ஸ் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பாரம்பரியம் மற்றும் மரபுகளுக்கு ஊடகத் துறை மூலம் குரல் கொடுக்கவும், தவறான தகவல்கள், மற்றும் பொய்யான விளம்பரங்களைத் தவிர்த்து, ஊடகத் துறையின் நேர்மையைப் பெருக்கவும், மனித உரிமைகள், சமூக நல்லிணக்கம், மற்றும் கலாச்சார மாண்பு தொடர்பான தகவல்களுக்கு முக்கியத் துவம் அளிக்கவும் உறுப்பு நாடுகள் ஒப்புக் கொண்டன. செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில் நுட்பங்களை, பாதிப்பு இல்லாத விதத்தில், முறையான தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் உறுப்பு நாடுகள் அங்கீகரித்தன. உலக ஊடகத் துறை பேச்சு வார்த்தைகளுக்கு, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோர் தலைமை ஏற்றனர்.

வேவ்ஸ்-செய்திகள்

வேவ்ஸ் உச்சி மாநாட்டில், டிஜிட்டல் யுகத்திற்கான வானொலி என்பது குறித்து இன்று இடம் பெற்ற குழு விவாத நிகழ்ச்சியில், உலக அளவிலான

நிபுணர்கள் பலர் இதில் கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். பிரச்சார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு சசிசேகர் வேம்பட்டி இந்நிகழ்ச்சியில் பேசுகையில் மக்கள் நன்மைக்கான முதல் ஊடகமான வானொலிக்கு, இந்தியாவில் மிகப் பெரிய சந்தை இருப்பதாக கூறினார். வானொலி நேயர்கள், சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்றும், சம்பந்தப்பட்ட அனைத்து பிரிவினரின் ஒருங்கிணைந்த செயல்பாடுகள், இத்துறைக்கு தேவை என்றும் அவர் தெரிவித்தார். பாரம்பரிய வானொலிப் பெட்டிகளை, அதிநவீன செயற்கை நுண்ணறிவு சாதனங்களுடன் சேர்த்துப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

வேவ்ஸ்-செய்திகள்

உலக மற்றும் கேளிக்கை துறை குறித்த, புள்ளிவிவரக் கையேட்டை, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை அமைச்சகம், வேவ்ஸ் மாநாட்டில் நாளை வெளியிட உள்ளது. நாட்டின் சேவைத் துறையில் முக்கிய பகுதியாக, ஊடக மற்றும் கேளிக்கை துறை திகழ்வதும், இத்துறை, ஆண்டுக்கு 7 சதவிகித அளவில் வளர்ச்சி அடைந்து, 2027-ஆம் ஆண்டில், 3 பில்லியன் டாலர் மதிப்பை எட்டும் என எதிர்பார்க்கப் படுவதும் குறிப்பித் தக்கது.

வேவ்ஸ்-செய்திகள்

ஊடக மற்றும் கேளிக்கை துறை சார்ந்த 43 நிறுவனங்களின் பங்கு விலை அடிப்படையிலான Nifty WAVES Index என்னும் புதிய குறியீட்டு எண்ணை, தேசியப் பங்குச் சந்தை இன்று தொடக்கி உள்ளது. இது தொடர்பாக மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மகாராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவீஸ் . தேசியப் பங்குச் சந்தையின் மேலாண் இயக்குநர் திரு ஏ கே சவ்கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பேருந்து நிலையம்

புதுச்சேரியில் ஸ்மார்ட் நகர திட்டத்தின் கீழ் 29 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த பொலிவுரு பேருந்து நிலையமாக மேம்படுத்தப்பட்டுள்ள, மறைமலை அடிகள் சாலை பேருந்து நிலையத்தை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இன்று திறந்து வைத்தனர். சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமி நாராயணன், திரு திருமுருகன், திரு சாய் சரவணன் குமார், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு நேரு என்கிற குப்புசாமி, திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு சிவசங்கர், திரு வெங்கடேசன், மற்றும், தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் விழாவில் கலந்து கொண்டனர்.

பின்னர் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, செய்தியாளர்களிடம் பேசுகையில் ராஜீவ் காந்தி சதுக்கம் முதல் இந்திரா காந்தி சதுக்கம் வரையிலான மேம்பால பணிகளும், கடலூர் சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகளும் விரைவில் தொடங்கப்பட உள்ளதாக தெரிவித்தார். தற்போது உப்பனாறு வாய்க்கால் மேம்பாலம் அமைக்கும் பணிகள் விரைந்து நடைபெற்று வருவதாகவும், அவர் கூறினார். லாஸ்பேட் இசிஆர் சாலையில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பெயரில், பேருந்து நிலையம் அமைக்க, விரைவில் அடிக்கல் நாட்டப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

(வாய்ஸ்)

புதுச்சேரியில் 4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பொலிவுரு பேருந்து நிலையத்தில் 46 பேருந்துகளை நிறுத்துவதற்கான வசதியும், 31 கடைகள் மற்றும் பயணிகளுக்கான பல்வேறு வசதிகளும் இடம் பெற்றுள்ளன.

*நீட்-கைலாஷ்நாதன்*

இளங்கலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு, புதுச்சேரி உட்பட நாடு முழுவதும், வரும் 4-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள நிலையில், இதுதொடர்பாக புதுச்சேரியின் அனைத்து 4 பிராந்தியங்களிலும், மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கல்வியாளர் குழு மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையிலான பாதுகாப்பு குழு உறுப்பினர்களுடன், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று ராஜ்நிவாசில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். தேசிய தேர்வு மைய அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். நீட் தேர்வு தொடர்பாக அந்தந்த பகுதியில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து துணை நிலை ஆளுநர் கேட்டறிந்து தேர்வர்களுக்கான போக்குவரத்து மற்றும் இதர வசதிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். புதுச்சேரியில் நீட் தேர்வுக்கான ஏற்பாடுகள் குறித்து, தேசிய தேர்வு மைய அதிகாரிகள் திருப்தி வெளியிட்டதாகவும் ராஜ்நிவாஸ் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ஆயுள் சான்றிதழ்*

புதுச்சேரியில் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள், கருவூல அலுவலகங்களில் ஆயுள் சான்றிதழ் சமர்ப்பிக்கும் முகாம் இன்று முதல் தொடங்கி உள்ள நிலையில் முகாம் தொடங்கும் நேரம், காலை 9.30 மணிக்கு பதிலாக காலை 8 மணியாக மாற்றப்பட்டுள்ளது. இன்றைய தினம் காலை 11 மணி வரை, சுமார் 500 ஓய்வூதியதாரர்கள் கருவூல அலுவலகத்திற்கு நேரில் வந்து, ஆயுள் சான்றிதழ் சமர்ப்பித்து இருந்தனர். தினசரி 600 முதல் 700 பேர் ஆயுள் சான்றிதழ் அளிப்பார்கள் என எதிர்பார்க்கப் படுவதாகவும், ஓய்வூதியர்களின் வயதை கருத்தில் கொண்டு, அவர்களுக்குத் தேவையான பந்தல், இருக்கை, மின்விசிறி மற்றும் குடிநீர்

வசதிகள் விரிவான முறையில் செய்யப் பட்டுள்ளதாகவும், கணக்கு மற்றும் கருவூல இயக்ககம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் நடைபெற உள்ள போட்டியில், குஜராத்-ஐதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு ஜெய்ப்பூரில் நடைபெற்ற போட்டியில், மும்பை அணி, 100 ரன் வித்தியாசத்தில், ராஜஸ்தான் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*வளர்ச்சி-ஷெகாவத்*

அதிவே வளர்ச்சியின் நாடு-இந்தியா என்ற தலைப்பில், புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற, 14-ஆவது திறந்த நிலை கருத்தரங்கை மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் தொடக்கி வைத்தார். கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா எல்லாத் துறைகளிலும் பெருமளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக அவர் தமது உரையில் கூறினார். இன்னும் வேகமாக வளர்ச்சி அடையத் தேவையான உள்ளாற்றலும், அடிப்படை வசதிகளும் இந்தியாவிற்கு உண்டு என்றும், வலுவான இந்திய சந்தை, முன் எப்போதும் இல்லாத பல வாய்ப்புக்களை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார். 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், ஒவ்வொரு துறைக்கும் முக்கிய பங்கு இருப்பதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

*முர்மு-மூத்த குடிமக்கள்*

குடும்பத்தின் முக்கிய அங்கமான மூத்த குடிமக்கள், குடும்பத்தினரைத் தாங்கும் உணர்ச்சி தூணாகவே திகழ்வதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். கண்ணியமான முதுமை என்பது குறித்து புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற

நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், சமூகத்தின் முக்கிய வழிகாட்டியாகவும் முதியோர் திகழ்வதாக கூறினார். மூத்த குடிமக்களின் பாதுகாப்பு, உடல்நலம், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது குறித்து குடியரசு தலைவர் மகிழ்ச்சி வெளியிட்டார். ஆயுஷ்மான் பாரத்-பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டத்தின் கீழ், 70 வயதைக் கடந்தவர்களுக்கும், மருத்துவ காப்பீடு வழங்கப்படுவதை அவர் சுட்டிக் காட்டினார். மூத்த குடிமக்களின் நலப் பாதுகாப்பு தொடர்பான இணையதளத்தை, குடியரசு தலைவர் இந்நிகழ்ச்சியின் போது தொடக்கி வைத்து, தமிழகத்தின் வேலூர் உட்பட 5 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள முதியோர் இல்லங்களையும் மெய்நிகர் முறையில் திறந்து வைத்தார். தேசிய வயோஸ்ரீ திட்டத்தின் கீழ் முதியவர்களுக்கான வாழ்க்கை உதவிக் கருவிகளையும் அவர் வழங்கினார். மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார், இணை அமைச்சர்கள் திரு பிஎல் வர்மா, திரு ராம்தாஸ் அத்வாலே உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டின் முதலாவது ஆழ்கடல் சரக்கு பெட்டக முனையமாக மேம்படுத்தப்பட்டுள்ள, கேரளத்தின் விழிஞ்ஞும் சர்வதேச துறைமுகத்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.

ஆந்திர மாநிலம் அமராவதியில், புதிய தலைநகரம் அமைப்பதற்கான, கட்டுமானப் பணிகளை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை மறுதொடக்கம் செய்து வைத்தார்.

மும்பையில் நடைபெறும் வேவ்ஸ் உச்சி மாநாட்டில், ஊடக மற்றும் கேளிக்கை துறை தொடர்பான, வேவ்ஸ் பிரகடனம், 77 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதுச்சேரியில் ஒருங்கிணைந்த பொலிவுரு பேருந்து நிலையத்தை துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர், இன்று திறந்து வைத்தனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------------------